**Source:** *Tamil Murasu*, p7
**Date:** 27 June 2023

# இதயத்தைச் சீர்செய்வதற்கு நம்பிக்கையளிக்கும் சிகிச்சைமுறை

‘ஸ்டெம் செல்’ எனப்படும் மூல உயிரணுக்கள், உடலின் பல்வேறு வகையான உயிரணுக்களாக வளர்ச்சியடையும் திறன்கொண்டவை. உடலின் முக்கிய அங்கங்கள் பழுதடைந்தால் அவற்றைச் சீராக்க அந்த உயிரணுக்கள் உதவுகின்றன. இது மூல உயிரணு சிகிச்சை என்று அழைக்கப்படுகிறது.

இதயச் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் குணமடைய உதவும் முயற்சியாக, மூல உயிரணுக்களில் இருந்து, துடிக்கும் இதய அணுக்களை உருவாக்க ஆய்வாளர்கள் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டுள்ளனர். அதில் ஓரளவு வெற்றிபெற்றாலும், விலங்குகளின் சேதமடைந்த இதயத் தசைகளில் பொருத்தப்பட்டபோது, அவற்றின் இயற்கையான இதயத் துடிப்புடன் அவற்றின் முரண்பட்ட செயல்பாடு கண்டறியப்பட்டது.

முதிர்ச்சியடையாத குருத்தணுக்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் புதிய சிகிச்சை முறை மூலம் இந்தப் பிரச்சினையை புறந்தள்ளி உள்ளனர் டியூக் - சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக மருத்துவப் பள்ளி மருத்துவர் குழுவினர்.

மே மாதம் ‘என்பிஜே ரீஜெனரேட்டிவ் மெடிசின்’ இதழில் வெளியிடப்பட்ட ஆய்வில், முதிர்ச்சியடையாத குருத்தணுக்கள் ஆய்வகத்தில் பயிரிடப்பட்டு பல்வேறு இதய அணுக்களாக உருவாக்க இயலும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் இறப்புக்கு மிகவும் பொதுவான காரணம் ‘இஸ்கிமிக்’ இதய நோய் எனப்படும் ‘இதயத்திற்கு ரத்த ஓட்டம் குறைவதால் ஏற்படும் மாரடைப்பு’ ஆகும்.



டியூக்-என்யுஎஸ் ஆய்வுக்குழுவினர், மாரடைப்பால் பாதிக்கப்பட்ட இதயத்தைப் புதிய சிகிச்சைமுறை மூலம் சீராக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

இதற்கான சிகிச்சை ஸ்டென்ட் எனப்படும் உறைகுழாய்களைப் பயன்படுத்தி ரத்த நாளங்களைத் திறந்து சீரான ரத்த ஓட்டத்திற்கு வழி செய்வதே. காலப்போக்கில், அத்தகைய நோயாளிகள் மாரடைப்பிற்கோ இதய செயலிழப்பிற்கோ ஆளாகிறார்கள். இதயம் செயலிழந்தால் அதற்கு வேறு எந்த சிகிச்சையும் இல்லை,” என்கிறார் இந்த ஆய்வை வழிநடத்திய உதவிப் பேராசிரியர் லின் யாப்.

எங்கள் அணுகுமுறை சிதைந்த திசுக்களை மாற்றி புதிய திசுக்களை உருவாக்க முயலும் சிகிச்சை என்றார் பேராசிரியர் டிரிக்வாசன்.

இந்த தொழில்நுட்பம் இதய செயலிழப்பு நோயாளிகளுக்கு மிகப்பெரும் வரமாக அமைவதோடு மீளுருவாக்க இருதயவியல் துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

மருத்துவர் யாப்பின் குழு முதிர்ச்சியடையாத குருத்தணுக்களை 10 பன்றிகளுக்கு இடமாற்றம் செய்தபோது அவற்றில் ஐந்து 30 நாள்கள் நீடித்த தற்காலிக இதயத்துடிப்பு பிரச்சினைகளுக்கு ஆளாயின.

ஆனால், அவை ஆபத்தானவை அல்ல, எனவே மாற்றுறுவை சிகிச்சைக்குப் பிறகு நோயாளிகளில் பாதி பேருக்கு இது நடக்கும் என்று கருதுகிறோம் எனவும் தற்போதைய ஆய்வில் மருந்துகள் பயன்படுத்தப்படாததால் அடுத்தகட்ட ஆய்வின்போது மருந்துகள் மூலம் இந்தப் பக்க விளைவைக் கட்டுப்படுத்திய பின் சிறிய முதற்கட்ட மருத்துவப் பரிசோதனைகள் தொடங்கும்,” என்றும் மருத்துவர் யாப் கூறினார்.

சிங்கப்பூர் மாரடைப்பு பதிவு அறிக்கை 2020ன் படி, அந்த ஆண்டில் கிட்டத்தட்ட 11,631 மாரடைப்புச் சம்பவங்கள் பதிவாகின. இது 2010ல் பதிவானதைவிட ஏறத்தாழ 60 விழுக்காடு அதிகமாகும். மேலும் ஒன்பது விழுக்காட்டுக்கும் அதிகமான மாரடைப்பு நோயாளிகள் 30 நாள்களுக்குள் இறந்துவிட்டதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.